31st March 1969]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) பதவியிலிருந்து ஓய்வு பெறும் வயதை 58-ல் இருந்து 55-ஆகக் குறைத்ததன் விளைவாக தமிழ்நாடு மின்சார போர்டில் 5—8—68 வரை பதவியிலிருந்து ஓய்வு அளிக்கப்பட்ட தொழில் நுட்ப, தொழில் நுட்பமில்லா பணியாளர் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

தொழில் நுட்பப் பணியாளர்கள்.

1	மின்சாரத் தலைமைப் பொறியாளர் ..	ஒருவர்.
2	கூட்டுத் தலைமைப் பொறியாளர் (மின்சாரம்).	ஒருவர்
3	சிறப்புத் தலைமைப் பொறியாளர் (எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம்).	ஒருவர்.
4	மேற்பார்வைப் பொறியாளர்—மின்சாரம் ..	பதினாறுபேர்.
5	மேற்பார்வைப் பொறியாளர்—கட்டிடம் ..	இருவர்.
6	கோட்டப் பொறியாளர்கள்—மின்சாரம் ..	நால்வர்.
7	கோட்டப் பொறியாளர்—இயந்திரவியல் ..	ஒருவர்.
8	உதவிப் பொறியாளர்கள்—மின்சாரம் ..	பதினேழு பேர்.
9	உதவிப் பொறியாளர்—இயந்திரவியல் ..	ஒருவர்.
10	உதவிப் பொறியாளர்—கட்டிடம்	ஒருவர்.

தொழில் நுட்பமில்லா பணியாளர்கள்.

1	தலைமைக் கணக்கர்கள்	ஐவர்.
2	தனி உதவியாளர்கள்	இருவர்.
3	பண்டகசாலை மேற்பார்வையாளர்	ஒருவர்.
4	துணைத் தலைமைக் கணக்கர்கள்	எண்மர்.

சென்ற ஆண்டு 6—8—68-லிருந்து டிசம்பர் முடிய மேலும் பதினொரு பொறியாளர்களும் துணைத் தலைமைக் கணக்கர் ஒருவரும் ஓய்வு பெற்றார்கள்.

THIRU D. SANTOSHAM : Has the reduction in the age limit for retirement been given effect to in respect of all cadres of employees from top to bottom or has it been given effect to only below a certain level ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : போர்டிலே முடிவு செய்யப்பட்ட சில குறிப்பிட்ட உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு மட்டும் கணக்கிடப்பட்டிருக்கிறது. புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

Pudukkottai Forest Area

* 299 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it was proposed to establish an agricultural farm by the denudation of forests in the Pudukkottai forest region ; and

(*b*) whether teak, eucalyptus and cashew have been cultivated in this region ?

[31st March 1969

புதுக்கோட்டை காட்டிலாகா பகுதி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) புதுக்கோட்டை காட்டிலாகா பகுதியில் காட்டை அழித்து விவசாயப் பண்ணை ஏற்படுத்த ஏதேனும் திட்டமிடப்பட்டதா ?

(இ) இந்த பகுதியில் தேக்கு, யூகலிப்டஸ் முந்திரி பயிரிடப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) குடுமியான் மலையில் அரசு வேளாண்மைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தொடக்கத்தில் 1,000 ஏக்கர் காட்டு நிலம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இப்பகுதியில் தேக்கு பயிரிடப்படவில்லை. 273 ஏக்கர் பரப்பில் பலவகை மரங்களும் 5 ஏக்கரில் செம்மரமும் (Red sanders) இப் பகுதியில் வளர்க்கப்பட்டுள்ளன.

Smuggling of Paddy

* 300 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether a lorry smuggling 117 bags of paddy to Kerala on 19th May 1968 had been apprehended within the jurisdiction of the Veerapandi Police Station, in Periyakulam taluk of Madurai district ;

(*b*) whether any prosecution has been launched against the lorry-owner ; and

(*c*) if not, the reasons therefor ?

நெல் கடத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட பெரியகுளம் தாலுகா வீரபாண்டி காவல் நிலைய எல்லையில் 19—5—1968-ஆம் நாள் 117 மூட்டைகள் நெல்லுடன் கேரளாவுக்குக் கடத்தல் செய்த லாரி பிடிபட்டதா ?

(இ) லாரி உரிமையாளர் மீது வழக்குத் தொடரப்பட்டதா ?

(உ) இல்லையெனில் காரணமென்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம். 17—3—68-ம் தேதி பிடிபட்டன.

(இ) ஆம். லாரி உரிமையாளர், மற்றும் எழுவர் மீதும் தொடரப் பட்ட வழக்கில், அவர்கள் குற்றவாளிகள் அல்ல எனத் தீர்ப்பளித்து, நீதிபதி அவர்களை விடுவித்து விட்டார்.

(உ) கேள்விக்கு இடமில்லை.